சுருக்கம்

பொது சுகாதாரம் – பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து இயக்ககத்திற்கு புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்திலுள்ள இரு மின் தூக்கிகளை இயக்க இரண்டு மின் தூக்கி இயக்குபவர் பணியிடங்கள் உருவாக்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ஏபி 2) துறை

அரசாணை (நிலை) எண்.297

நாள்: 24.08.2017
திருவள்ளுவர் ஆண்டு 2048
ஹேவிளம்பி, ஆவணி – 8

படிக்கப்பட்டவை:–

1. அரசாணை (நிலை) எண். 839, சுகாதாரம், நாள் 15.05.1979.
2. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை, இயக்குநரின் ந.க. எண் 064915/ ப.தொ.3/இரு3/2016, நாள் 20.11.2016.

----

ஆணை:

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை, இயக்ககத்திற்கென புதிதாக கட்டப்பட்ட கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ள இரண்டு மின் தூக்கிகளை இயக்கி பராமரிக்க, இரண்டு மின் தூக்கி இயக்குபவர்கள் நியமனம் செய்யப்பட வேண்டியது அவசியம் எனவும், இதன்பொருட்டு மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணைப்படி நிரந்தரமாக்கப்பட்டு காலியாகவுள்ள ரூ 4,800 – 10,000 + தர ஊதியம் ரூ 1300/– என்ற ஊ.திய விகிதத்திலுள்ள ஒரு "சமைப்பவர்" (Cook) மற்றும் ஒரு "சுத்தம் செய்பவர்" (Cleaner) பணியிடங்களை ஒப்படைப்பு செய்து, அதற்குப் பதிலாக புதிதாக இரண்டு "மின்தூக்கி இயக்குபவர்" (Lift Operator) பணியிடங்களை ரூ 4800 + 10000 + தர ஊ.தியம் ரூ 1400/– என்னும் ஊதிய விகிதத்தில் தோற்றுவித்து ஆணை வழங்குமாறு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துணை இயக்குநர் அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து ஏற்றுக் கொண்டு, மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நிரந்தரமாக்கப்பட்டு காலிப் பணியிடமாகவே நீடிக்கும் ஒரு சமைப்பவர் (Cook) மற்றும் ஒரு சுத்தம் செய்பவர் (Cleaner) (ஊதிய விகிதம் ரூ 4800 – 10000 + தர ஊதியம் (ரூ 1300/–) ஆகிய இரண்டு பணியிடங்களைை ஒப்படைப்பு செய்து, அதற்கு ஈடாக பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை இயக்ககத்திற்கென கட்டப்பட்ட புதிய கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ள இரண்டு மின் தூக்கிகளை இயக்குவதற்கும், பராமரிப்பதற்கும் இரண்டு மின் தூக்கி இயக்குபவர்களை ரூ. 4800–10000 + தர ஊதியம் ரூ 1400/– என்னும் ஊதிய விகிதத்தில் நியமனம் செய்திட ஏதுவாக இரண்டு மின் தூக்கி இயக்குபவர் (Lift Operator) பணியிடங்களை, புதிய நியமனங்கள் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்களில் அப்பணியிடத்திற்குரிய சிறப்பு / தற்காலிக விதிகளின் காப்புரைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 அரசாணைகள் / அறிவுரைகள் கண்டிப்பாக கடைபிடிக்கப்பட்டு நியமனம் செய்யப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் அப்பணியிடங்களை நிரப்பிய நாளிலிருந்து ஓராண்டிற்கு தற்காலிகமாக தோற்றுவித்து ஆணை வெளியிடப்படுகிறது.

(த/செ/தி)